முதல்வர் கலைஞர் பிறந்தநாள் பரிசுகள்

தமிழரசு

மலர்-5 இதழ்-23
1-6-1975

சமதர்ம
சமுதாயப் புரட்சித் திட்டங்கள்.

1971-ல் 48-ஆம் வயதில் —
பிச்சைக்காரர்
மறுவாழ்வுத் திட்டம்

1972-ல் 49-ஆம் வயதில் —
இலவசக் கண்ணொளி
வழங்கும் திட்டம்

1973-ல் 50-ஆம் வயதில் —
கைரிக்ஷாக்களை அகற்றி இலவச
சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம்

1974-ல் 51-ஆம் வயதில்
உடல் ஊனமுற்றோர்
மறுவாழ்வுத் திட்டம்

1975-ல் (இவ்வாண்டு)
52-ஆம் வயதில்
"அனாதைச் சிறுவர்-
கைம்பெண்கள்
மறுவாழ்வுத்
திட்டம்"

சகாப்தத்தைப் படைத்தவர்!

குளிர்வடியும் வட்டநிலா கொடிய தென்றும்
கொள்ளையின்பச் சுவைமல்கும் பலாம ரத்தில்
பிளிறுகின்ற களிறுதனைப் பிணைத்தாற் போலப்
பெருவேரில் பழுத்தகனி புளிக்கு மென்றும்
தளிரனைய எழில்குலுங்கும் பருவ மங்கை
தன்கணவன் மறைந்ததனால் கைம்பெண் ஆனால்
வெளிர்நிறத்துப் புடவைதான் அவளுக் கென்றும்
வேற்றுமைகள் பேசியது பழைய காலம்!

தாய்தந்தை இன்பத்தைப் பகிர்ந்து கொண்டு
தம்உறவால் விளைகின்ற பிள்ளைச் செல்வம்-
வாய்தவறி உதிர்கின்ற தீச்சொல் போல
மற்றவரை வருத்திடினும் கவலை யின்றி
மாய்வதையும் பொருட்படுத்தா(து) ஓடு கின்றார்!
மாந்தரினம் தழைப்பதற்கு உதவி யோர்போல்
காய்தலையும் உவத்தலையும் அகற்றிப் பார்த்தால்
கடமையினைத் தவறியவர் பெற்றோர் தாமே?

கவிஞர் கருணானந்தம்

வாழ்வதற்குப் பிறப்பெடுத்த இவர்க ளெல்லாம்
வதைபடுதல் சமுதாய நீதி யன்று !
பாழ்படுதல் தேவையற்ற தென்று ணர்ந்து
பண்டுமுதல் இன்றுவரை பலபேர் கூறித்
தாழ்வகற்ற முயன்றுள்ளார் தாமா கத்தான் ;
தக்கவழி காணலின்றி இடையில் விட்டார் !
ஆழ்ந்தகன்ற அனுபவத்தால் ஆர்வத் தாலே
அக்கறையால் அன்பினாலே இரக்கத் தாலே

ஆட்சியினர் முன்வந்து மீட்சி காணும்
அணுகுமுறை கண்டறிந்த நேர்த்தி என்னே !
மாட்சியெனில் இஃதன்றோ ? மனிதக் கூட்ட
வரலாற்றில் புதுமையன்றோ ? அநாதை யென்ற
காட்சிக்குப் பொருளாக எவரும் இல்லாக்
கண்ணியமாய்க் ; கண்ணுக்கும் இனிய தோற்றம் !
சாட்சியங்கள் வேறெதற்கு ? சரித்தி ரத்தில்
சகாப்தத்தைப் படைத்தவர்நம் முதல்வ ரன்றோ ?

அட்டை சொல்லும் செய்தி

கைம்பெண்கள் மறுவாழ்வு பெற்றிட...

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் ம.பொ.சிவஞானம் அவர்கள் தமிழரசு இதழுக்கு அளித்த பேட்டி

மனிதாபிமான உணர்ச்சியோடு பார்க்கிறபோது கலைஞர் ஆட்சி இதுவரை செயற்படுத்தியுள்ள சமூக நலத் திட்டங்களிலே விதவைகள் மறுவாழ்வுத் திட்டம் தலைசிறந்தது. விதவையர் பிரச்சினை இந்து சமுதாயத்தில் மட்டுமே நிலவுகின்ற மிகப்பெரும் கொடுமையாகும். இன்று மட்டுமல்ல; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககாலத் தமிழகத்திலேயே கணவனை இழந்த பெண்களை உடன்கட்டை ஏற்றிக் கொல்வது நிகழ்ந்தது. கொல்லாமல் விட்டாலும், கொடுமையான விரதங்களைக் கடைப்பிடித்து சிற்றின்ப வாழ்க்கைக்கு விலக்காக வைப்பது இருந்தது. இந்தக் கொடுமைகளை விதவைகளின் மீது சுமத்தியது பழந்தமிழர் சமுதாயம்.

இவ்வளவு நீண்ட காலத்தில் அதாவது சங்ககாலம் தொட்டு இந்தக் காலம் வரை விதவைகளின் கண்ணீரைத் துடைக்க ஆட்சி பொறுப்பேற்றதாக, வரலாறு கூறவில்லை. ராசாராம் மோகன்ராய் தூண்டுதல் மூலம் உடன்கட்டை ஏறுவதைத் தடுப்பதற்கு மட்டும் சட்டம் பிறந்தது. மறுவாழ்வு பிறப்பதற்குச் சட்டம் இயற்றப்படவில்லை. இப்போதுதான் கலைஞர் ஆட்சிதான் முதன் முதலாக அதற்குப் பொறுப்பேற்கிறது. இது மிகவும் புண்ணியமான-புனிதமான பணி என்பேன்.

சுயமரியாதை இயக்கம் விதவைகளின் மறுமணத்தை ஆதரித்து மிகவும் தீவிரமாகப் பிரசாரம் செய்தது. பெரியார் ஈ.வே.ரா. பல விதவையர்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் புனிதமான பணியைத் தமது இயக்கத்தின் சார்பில் நிறைவேற்றி வைத்தார். அப்போது கூட ஆட்சி இதற்கு பொறுப்பேற்க வேண்டுமென்று அவர்கூடக் கூறவில்லை.

பாரதியார், பாரதிதாசன் போன்ற மகாகவிகள் விதவையர்களின் துயர் குறித்துக் கண்ணீரால் கவிதைகள் தீட்டினர். அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கவும், அப்போதைய அரசு முன்வரவில்லை. கலைஞர் வகுத்துள்ள இந்த விதவையர் மறுவாழ்வுத் திட்டம் எத்தனை ஆயிரம் பேர்களுக்குப் பயன்படப் போகிறது என்பதற்கான புள்ளி விவரம் என்கையில் இல்லை. மறுவாழ்வு பெறும் விதவையர்கள் மிகச் சிலரே யானாலும் அந்தத் திட்டம் பாராட்டப்படக்கூடியதுதான். இருவேறு சாதிகளிடையே கலப்பு மணம் நிகழ்வதே இன்னும் அருமையாகத்தான் இருக்கிறது. அந்தச் சிறிய மாறுதலைக்கூட சமுதாயம் இன்னமும் ஒருமனப்பட்டு ஆதரிக்கவில்லை. விவாகரத்து மூலமோ, கணவனால் கைவிடப்பட்டோர், வாழ்விழந்த இளம் பெண்கள் நம் சமுதாயத்தில் ஆயிரம் ஆயிரமாக இருக்கின்றனர். அவர்கள் மறுமணம் செய்து கொள்வதற்கும் சமுதாயம் இசைவு தரவில்லை. இந்தநிலையிலே, விதவையர்கள் மறுமணம் என்பது சாதாரண விஷயமல்ல, அது சமுதாயப் புரட்சியாகும். இந்து சமயத்திலே இஸ்லாமியத்திலும், கிருத்துவத்திலும் உள்ளதைப் போல ஒரே ஸ்தானமோ, ஒரே தலைமையோ இருக்கவில்லை. மடத்திற்கொரு தலைவர், மடத்துத் தலைவர்களிடையே ஒருமைப்பாடு இல்லாத போக்கு, இந்த நிலையில் மதத்தைக் கொழுகொம்பாகப்

பற்றிக் கொண்டு தோன்றிய விதவைத் தனத்தைப் போக்கி அக்கொடுமைக்கு இரையாகி வரும் இளம் பெண்களுக்குப் பூவும் பொட்டும் தந்து, காதலொருவனைக் கைப்பிடித்து வாழ வழிவகுத்து, சமுதாயப் புரட்சி நிகழ்த்த அரசுதான் பொறுப்பேற்க வேண்டியுள்ளது. இதனை உணர்ந்து முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் துணிவுடன் முன்வந்து பொறுப்பேற்றிருக்கிறார்.

மறுவாழ்வு தேவைப்படுவோர், சங்கம் அமைத்து, மாநாடு நடத்தி, ஆள்வோர்க்குக் கோரிக்கை விடுத்து, தங்கள் கோரிக்கைக்கு வெற்றி தேடுவதுதான் வழக்கம்—வரலாறு. ஆனால் வாழ்விழந்த விதவையர்கள் இந்த வழக்கத்தையோ, வரலாற்றையோ கடைப்பிடித்து முதல்வருக்குக் கோரிக்கை அனுப்பவில்லை. முதல்வர் தாமாகவே நினைந்து இந்தப் புனிதப் பணியை மேற்கொண்டிருக்கிறார். தாயரை இருவகையாகப் பிரிக்கிறார் மாணிக்கவாசகர். அழுத பிள்ளைக்குப் பால் கொடுக்கும் தாயர் ஒரு வகையினர். குழவி அழாத நிலையிலும், நேரம் அறிந்து, தானே நினைந்து பால் ஊட்டும் தாயர் ஒரு வகையினர். இரண்டாவது வகையான தாயரை தெய்வத்தோடு ஒப்பிடுகிறார்.

''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து'' என்னும் திருவாசகம் இதனை உணர்த்தும். விதவையர்க்கு மறுவாழ்வு அளிக்கும் விஷயத்தில் கலைஞரும் மாணிக்கவாசகர் குறிப்பிட்ட தெய்வத்தன்மை படைத்த தாயின் நிலையில் பொறுப்பேற்றிருக்கிறார்.

இந்த ஒரு திட்டத்தையேனும் தமிழர்கள் எல்லாம் மனமுவந்து ஏற்று முதல்வர் கலைஞரையும் அவரது ஆட்சியையும் பாராட்ட வேண்டும்.

விதவைத் திருமணம் செய்து கொள்ள முன்வந்தால், 10 ஆயிரம் ரூபாய் அரசு உதவி புரியுமென்று முதல்வர் அறிவித்திருக்கிறார். பணத்திற்கு ஆசைப்பட்டு விதவையை மணந்து பணம் கிடைத்துவிட்டவிட்ட பின்னர், அவளைக் கைவிட்டு விட்டால் என்ன செய்வது-என்னும் வினா எழுவது இயற்கை. அப்படிப்பட்ட தவறு நிகழாதவாறு தமது திட்டத்திலேயே முதல்வர் வழிவகை செய்திருக்கிறார். தவறுகளையே கற்பனை செய்து கொண்டு பயப்படுவோமானால் ஒரு சீர்திருத்தத்தையும் நடைமுறைக்குக் கொண்டு வர முடியாது. மறுமணம் செய்து கொள்ளும் விதவையர்கள் வாழ்க்கை அனுபவத்தை ஏற்கெனவே ஓரளவு பெற்றவர்களாகத்தான் இருப்பார்கள். கல்விப் பருவத்தைக் கடந்தவர்களாகவும் இருப்பது இயற்கை. ஆகவே பணத்திற்கு ஆசைப்பட்டு, தங்களை யாரும் ஏமாற்றுவதற்கு அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். ஆகவே தவறுகளைக் கற்பனை செய்து கொள்ளத் தேவையில்லை. தாய்க்குலத்திற்கு ஆயிரம் ஆண்டுகளாக நாம் இழைத்துவரும் பாவத்திற்குக் கலைஞர் தன் திட்டத்தின் மூலம் கழுவாய் தேடுவோமாக!

இந்தப் புனிதமான திட்டத்தைத் தமது பிறந்த நாளிலே தொடங்கி வைக்க முன்வந்த முதல்வரை வாயார வாழ்த்துகின்றேன். இதற்கு ஒரு மனதுடன் இசைவு தந்த இந்த அமைச்சரவையையும் பாராட்டுகிறேன்.





ஊனமுற்றோர் மறுவாழ்வு பெற...

ஊனமுற்றோர்க்கு மறுவாழ்வுப் பணியில் தமிழ்நாடு அரசு எடுத்த ஒரு முக்கிய நடவடிக்கை, அப்பணிக்கென ஒரு மாநில வாரியம் அமைத்ததாகும். பல்வகைப்பட்ட சிறப்புத் திட்டங்களின் மூலமாக, ஊனமுற்றோரின் வாழ்வும் நலனும் சிறக்கப் பாடுபடுவது மட்டுமன்றி, இம்மாநில வாரியம், தமிழகத்தில் ஊனமுற்றோரின் (பார்வையற்றோர், செவிப்புலனும், நாப்புலனும் இழந்தோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோர், குணமடைந்த தொழுநோயாளிகள், தீக்காயம் அடைந்தோர்) மறுவாழ்வுப் பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் பல்வகையாலும் ஒருங்கிணைக்கும் பணியினையும் ஆற்றும். இந்நடவடிக்கை ஊனமுற்றோரின் நல்வாழ்வுப் பணிக்குச் சிறப்பானதோர் இடத்தையும், நோக்கத்தையும் நிச்சயம் அளிக்கும்.

இவ்வாரியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு: —

1. தமிழகத்திலுள்ள ஊனமுற்றோரின், குறிப்பாக பார்வை இழந்தோர், செவி மற்றும் நாப்புலன் இழந்தோர் மற்றும் உறுப்பு நலன் பாதிக்கப்பட்டோர் குணமடைந்த தொழு நோயாளிகள், தீக்காயம் அடைந்தோர் ஆகியோரின் மறுவாழ்வுப்பணியின் பரிமாணத்தை ஆய்தல்.

இயக்குநர்,
வேலை வாய்ப்பு, மற்றும் பயிற்சித் துறை.

2. முக்கியமாக மருத்துவ, பொருளாதார மற்றும் சமூகத் துறைகளில் ஊனமுற்றோரின் நிலையை மேம்படுத்தக்கூடிய திட்டங்களை அரசின் ஒத்துழைப்போடு . வகுத்தலும், செயற்படுத்தலும்.

3. ஊனமுற்றோருக்கான வேலைவாய்ப்புத் துறைகளைக் கண்டறியவும் அவர்களைப் பணிகளில் அமர்த்தும் வேகத்தைத் துரிதப்படுத்தவும் வேலைவாய்ப்புத் துறைக்கு உதவி அளித்தல்.

4. ஊனமுற்றோருக்கான சுயிற்சிக்காகவும், அவர்கள் பயமாகப் பணிபுரியவும் மற்றும் அவர்களின் நிலையை மேம்பாடடையச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தனிப்பட்ட ஊனமுற்றோருக்கும், ஊனமுற்றோரின் நல்வாழ்வுப் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கும், பொருளாதார உதவி அளிப்பது குறித்து ஆராய்தலும், உதவி அளித்தலும்,

5. ஊனமுற்றோரின் கல்வி, பயிற்சி மற்றும் மறுவாழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களின் முயற்சிகளை ஒருங்கிணைத்துச் செயலாற்றச் செய்தல்.

தமிழகத்திலுள்ள ஊனமுற்றோரின் நல்வாழ்வில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள், சங்கங்கள் இவைகளின் விவரமான குறிப்புகள், தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளவ.

தமிழக அரசு 8.3.72 தேதியிட்ட அரசாணை எண். 404 (தொழிலாளர் துறை)-ல் மாநில வாரியத்தின் அமைப்பிற்கான ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாரியத்தின் முதல் கூட்டம் 28-7-72 அன்று நடைபெற்றது.

இவ்வாரியத்திற்கான விதிகள் ஒழுங்குமுறை விதிகள் மற்றும் துணை விதிகள் முதலியன அமைக்கப்பட்டு 14-6-73 அன்று நடைபெற்ற வாரியத்தின் திட்டத் துணைக் குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.

தனிப்பட்டோர் நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் இவைகளுக்கு மானியம் வழங்குவது பற்றி, இதற்கான ஒழுங்குமுறை விதிகள் முதலியன அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகும், மேலும் இவ்வாரியத்திற்குத் தேவையான அளவு நிதி திரட்டிய பிறகும் ஆய்வு செய்யப்படும்.

ஊனமுற்றோரின் நல்வாழ்வில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் சங்கங்கள் இவைகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில், கடந்த இரண்டு ஆண்டுகளில் பருவ மழை சரிவரப் பெய்யத் தவறி விட்டது. இதன் விளைவாகத் தமிழ்நாடு முழுவதிலும் கடு மையான வறட்சி ஏற்பட்டிருக் கிறது. பருவ மழை பெய்யத் தவறியதால், சென்னை நகரி லும் கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நகரம், தனது குடிநீர்த் தேவைக்காகச் சோழவரம், ரெட்ஹில்ஸ் ஆகிய இடங்களி லுள்ள இரண்டு ஏரிகளிலிருந் தும் நாள்தோறும் சுமார் 5 கோடியே 20 இலட்சம் காலன் தண்ணீர் கிடைக்கும்.

பருவமழை பெய்யத் தவறிய தால், இந்த ஏரிகளில் தண் ணீர் வற்றிப்போய் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தண்ணீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதற்குத் தமிழ்நாடு அரசு தன்னால் முடிந்த எல்லா நடவடிக்கைகளையும் மேற் கொண்டு வருகிறது.

4,400 குழாய்க் கிணறுகளும் 250 கிணறுகளும் அமைக்கப் படும்.

நாள்தோறும் 10 இலட்சம் காலன் தண்ணீர் கொடுக்கக் கூடிய 5 குழாய்க் கிணறுகள் சென்னைக்கு அருகிலுள்ள கட லோரப் பகுதியில் அமைக்கப் பட்டிருக்கின்றன. திருவான் மியூருக்குத் தெற்கே கடலோ ரத்தில் நாள்தோறும் 10 இலட்சம் காலன் தண்ணீரை நிலத்திலிருந்து வெளியே கொண்டு வந்து பொது மக்க ளுக்கு விநியோகிப்பதற்கான பணி நடந்து வருகிறது. இந்த வேலை மே மாத முடிவுக்குள் பூர்த்தியாகிவிடும். நகரில் ஆங்காங்கே 618 பொதுக் கிணறுகளில் தூர் எடுக்கப்பட் டிருக்கிறது.

குடிசைப் பகுதிகளில் தண் ணீர் விநியோகிப்பதற்காக 425 தண்ணீர்த் தொட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்போம்

முதல்வர் கலைஞர்

சாதாரணமாக நாள்தோறும் ஐந்து கோடியே 20 இலட்சம் காலன் தண்ணீர் விநியோ கிக்கப்படும். சென்னை நகரில் இப்போது ஒருநாள் விட்டு ஒருநாள் சுமார் 3 கோடி காலன் தண்ணீர் மட்டுமே விநி யோகிக்கப்படுகிறது. இந்த ஏரிகளிலுள்ள தண்ணீரைப் பாதுகாத்து வைப்பதற்கு எங் களால் முடிந்த அளவு நட வடிக்கை எடுத்து வருகிறோம்.

தாமரைப்பாக்கத்தில் நிலத் தடியிலிருந்து கிடைக்கும் தண் ணீரை இந்த ஏரிகளுக்குக் கொண்டுவரும் கால்வாய்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. தண்ணீர்க் கசிவைத் தடுத்து, எல்லா நீரையும் ஏரிகளுக்குக் கொண்டு வருவதற்காக இந்தக் கால்வாயில் ஒரு பகுதியில் சிமெண்ட் பூசும் வேலை நடந்து வருகிறது.

இந்தப் பணி, மே 15-ம் தேதிவாக்கில் முடிவடையும். இதனால் விநியோகத்துக் கென்று 15 இலட்சம் முதல் 20 இலட்சம் காலன் வரை கூடுதலாகத் தண்ணீர் கிடைக் கும்.

பஞ்சட்டியிலிருந்து கிடைக் கும் நிலத்தடி நீரைச் சென்னை உரத் தொழிற்சாலையும், சென்னை எண்ணெய்ச் சுத்தி கரிப்பு ஆலையும் பயன்படுத்தி வருகின்றன. தண்ணீர் உப யோகத்தைக் குறைத்துக் கொள்ளுமாறு இந்த நிறுவனங் களைக் கேட்டுக் கொண்டிருக் கிறோம். அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இதன் காரணமாக விநியோ கத்திற்கென்று கூடுதலாக 17 இலட்சம் காலன் தண்ணீர் கிடைக்கும் என்று எதிர்பார்க் கிறோம்.

மிகக் குறுகிய காலத்தில் 2,400 குழாய்க் கிணறுகள் புதி தாக அமைக்கப்பட்டிருக்கின் றன. 501 கிணறுகள் தோண் டப்பட்டிருக்கின்றன. ஜூன் மாத இறுதிக்குள்ளாக மேலும்

விரைவில் மேலும் 500 தண்ணீர்த் தொட்டிகளைத் தயாரித்து நகரில் ஆங்காங்கே பொருத்தவும் திட்டமிடப் பட்டிருக்கிறது. லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டுவரப்பட்டு இந்தத் தொட்டிகளில் நிரப் பப்படும்.

தற்போது இந்தத் தொட்டி களில் தண்ணீரை நிரப்புவதற் காகச் சுமார் 50 லாரிகள் பயன் படுத்தப் படுகின்றன. விரைவில் இவற்றின் எண் ணிக்கை 100 ஆக அதிகரிக்கும். தேவை அதிகரித்தால் மேலும் பல லாரிகளை இந்தப் பணியில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டி ருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினை யைச் சமாளிப்பதற்காக அரசு இப்படிப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நீண்டகால அடிப்படையில் தமிழக அரசு பாலாறு குடிநீர்த்

திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டப்படி பாலாறு ஆற்றுப் படுகையி லிருந்து தண்ணீர் எடுத்து நாள்தோறும் 40 இலட்சம் காலன் வீதம் சென்னை நகரில் விநியோகிக்கப்படும்.

இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்தப் பணி பூர்த்தியடையும்.

வீராணம் குடிநீர் விநி யோகத் திட்டம் நிறைவேறி விட்டால் சென்னை நகருக்குக் கூடுதலாக 4 கோடி காலன் தண்ணீர் கிடைக்கும். இந்தத் திட்டம் 1976-ஆம் ஆண்டு முடிவுக்குள் பூர்த்தி யடையும் என்று எதிர்பார்க்கிறோம். இப் படியாக, தற்போது ஏற்பட்டி ருக்கும் பிரச்சினையைச் சமா ளிப்பதற்கும், கிடைக்கக்கூடிய தண்ணீரை முடிந்த வரையில் எல்லாருக்கும் சமமாகப் பகிர்ந்து கொடுப்பதற்கும் அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. சென்னை மாநகராட்சி தனது

அன்றாடப் பணிகளைச் சிறப் பாக செய்து வருகிறது.

இப்போது ஏற்பட்டிருக்கும் சிரமமான பிரச்சினையைச் சமாளிப்பதற்கு அரசும் சென்னை மாநகராட்சியும் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்.

சென்னை நகர மக்கள், குடி நீரை முடிந்தவரை வீணாக்கா மல் பயன்படுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கின் றேன். இந்தச் சமயத்தில் ஒவ் வொரு சொட்டு நீரையும் முக் கியமாகக் கருதிக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும். சென்னை நகர மக்கள் இந்தப் பிரச்சினையை நன்கு உணர்ந்து நிலைமையை வெற்றிகரமாகச் சீர்படுத்துவதில் அரசுடன் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன்.

[மைய அரசின் டெலிவிஷன் பிரிவுக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆங்கிலத்தில் அளித்த பேட்டியின் தமிழாக்கம்]

தமிழரசு

16-6-75 இதழ்

கல்விச் சிறப்பிதழாக மலர்கிறது!

அதிசய நீர் ஊற்று நிபுணர்

குழாய்க் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்ட (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்க) குறிப்பிட்ட பூமியில் உள்ள நீர் ஊற்றுக்களை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுக்களிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர்ஊற்றுக் கள் கிராஸ் செய்யும் சரியான இடமும், அதில் கிடைக்கும் தண்ணீரின் அளவும், நீர் ஊற்று உள்ள ஆழம் முதலிய விவரங்களையும் தெரி விக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய்க் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2:3 என்ற விகிதத்தில் ரூ. 3,000 நஷ்டஈடு கொடுக்கப் படும்.

விவரங்களுக்கு 25 நயா பைசா ஸ்டாம்பு அனுப்புக.

K. கந்தசாமி,

(Ex. Member of the British Society of Dowers, London)

நீர் ஊற்று நிபுணர், கணபதி அஞ்சல், கோயமுத்தூர்-6.

தொலைபேசி எண் 31912.

அனாதைச் சிறுவர்கள், ஆதரவற்ற கைம்பெண்கள் நல்வாழ்வுக்காக...

நமது அரசின் நிதிநிலை அறிக்கையில் அனாதைச் சிறுவர்கள், ஆதரவற்ற கைம்பெண்கள் நல்வாழ்வுத் திட்டம் பற்றி அறிவிக்கப்பட்டது.

அந்தத் திட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு: —

இந்த ஆண்டு 3 ஆயிரம் சிறுவர், சிறுமியருக்கும் 52 இடங்களில் உணவு உடை உறைவிடம் ஆகிய பராமரிப்புக்கான இல்லங்கள் அமைக்கப்படும்.

5 வயது முதல் 10 வயது வரை உள்ள சிறார்கள் இந்த இல்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இந்த இல்லங்களில் உள்ளவர்கள் ஆங்காங்குள்ள கல்வி நிலையங்களில் கல்வி வசதி பெற வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

இந்த இல்லங்களினுடைய பராமரிப்புச் செலவுகள் அறநிலையத்துறை சார்பில் 75 சதவிகிதமும், அரசின் சார்பில் 25 சதவிகிதமும், ஏற்றுக்கொள்ளப்படும். இந்த இல்லங்கள் அமைப்பதற்கான கட்டடச் செலவுகளுக்குத் தொடராச் செலவாக தொடக்கத்தில் 30 இலட்ச ரூபாய் செலவாகும்.

இந்தச் செலவு முழுவதும் அரசின் சார்பில் ஏற்றுக் கொள்ளப்படும்.

பெற்றோர் இன்றியும் வேறு குடும்பப் பாதுகாவலர் (கார்டியன்) யாருமின்றியுமுள்ள குழந்தைகளுக்கு முதல் உரிமை இந்த இல்லங்களில் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்போது வழங்கப்படும். தாய் மாத்திரமிருந்து குழந்தைகளைக் காப்பாற்றவோ வளர்க்கவோ சக்தியற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கு இரண்டாவது உரிமை வழங்கப்படும். இந்த வகையில் விண்ணப்பங்கள் 3,4 பிரிவினங்களாக வரிசைப்படுத்தப்பட்டு, சிறார்கள் இந்த இல்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்தத் திட்டம் நமது முதல்வர் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3-ஆம் நாளிலிருந்து தொடங்கும்.

அனாதைக் குழந்தைகளுக்கான விண்ணப்பங்களைப் பெற இப்போதே உடனடியாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர், அறநிலையத் துறை துணை ஆணையர், மாவட்ட நலத்துறை அலுவலர்கள் (தாழ்த்தப்பட்ட பின்தங்கிய நலத்துறை அலுவலர்கள்) இந்த விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் குழுவில் இருப்பார்கள்.

இந்த இல்லங்கள் தவிர தனியார் சிலர் தனியே நடத்தும் இல்லங்களுக்குக் கல்வித் துறை மூலம் அரசு தனியே மானியம் வழங்கிக் கொண்டிருக்கிறது. அவைகளுக்கு இந்தத் திட்டத்தில் எந்தவித பாதகமும் ஏற்படாது.

இந்த இல்லங்களில் வந்து சேரும் சிறார்கள் தங்களுடைய கல்வி முடியும் வரை இந்த இல்லங்களில் இருப்பார்கள். இவர்களுக்குத் தொடக்கத்தில் அறிவுக் கல்வி போதிக்கப்பட்டாலும் அவர்களுக்கான தொழில் கல்வியும் வழங்க அரசு திட்டமிடும்.

சமுதாயப் புரட்சிக்கு.....

ஏற்கெனவே முதியோர் பென்ஷன் 60 வயதுக்கு மேற்பட்டிருப்பவர்களுக்கு 20 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது.

அண்மையில் அரசு ஆணையின்படி ஊனமுற்றவர்களாக இருந்தால் 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குவழங்கப்படும். வருகின்ற ஜூலைமாதம் முதல் ஆதரவற்ற விதவைகளுக்கான பென்ஷன் 45 வயதுக்கு மேற்பட்ட கைம்பெண்களுக்கு வழங்கப்படும். அவர்களுக்கு இந்த ஆண்டு இலவசமாகத் தையல் மெஷின்கள் வழங்கப்படும். ஒரு எந்திரத்தின் இப்போதைய விலை ரூ. 700 ஆகும். கதர் கிராமக் கைத்தொழில் வாரிய மேற்பார்வையில் 500 கைம்பெண்களுக்குக் கிராமிய நூற்புக் கூடங்கள், (அம்பர் சர்க்கா இணைத்தவை) அமைக்கப்படும். அதற்கான கூடங்களை அமைத்தல்; அம்பர் சர்க்கா வழங்கப்படுதல் ஆகிய செலவுகளை அரசு மேற்கொள்ளும். கதர் கிராமத் தொழில் வாரியம் மேற்பார்வையில் அக்கூடங்கள் இயங்கும். வேறு தொழிற் பயிற்சி பெற்றுள்ள கைம்பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க ஏற்பாடும் செய்யப்படும்.

18 வயது முதல் 30 வயது முடிய உள்ள விதவைப் பெண்களை மறுமணம் புரிந்து கொள்கிறவர்களுக்குச் சமுதாயப் புரட்சியை ஊக்குவிக்கின்ற வகையில் அந்தக் கணவன் மனைவி இருவரின் பெயராலும் சேமிப்புப் பத்திரங்கள் ரூ. 5000-க்கு வழங்கப்படும். அந்த ஐயாயிரம் ரூபாய், பத்தாண்டுகள் கழித்து அந்தத் தம்பதிகள் திரும்பப் பெறும்போது ரூபாய் பத்தாயிரத்துக்கு மேல் பெற வழியுண்டு. இப்படிப்பட்ட சமுதாயப் புரட்சி செய்யும் கணவருக்கு, வேலைவாய்ப்பில் அவருடைய தகுதிக்கேற்ப முன்னுரிமை வழங்குவது பற்றியும் திட்டமிடப்படும்.

தன்னிகரற்றது தமிழகக் காவல் துறை!

முதல்வர் கலைஞருடன் 'இன்டர்போல்' செகரட்டரி ஜெனரல் திரு. ஜீன் நிபோடே, தமிழ்நாடு காவல்துறைத் தலைமை அலுவலர் திரு. எப். வி. அருள்.

தமிழகக் காவல்துறை தன்னிகரற்று விளங்கிவருவதை இன்று அனைத்திந்தியா மட்டுமல்ல, அனைத்துலகும்கூடப் பாராட்டுகின்றன.

பயங்கரக் கொலை, கொள்ளை போன்ற பல்வேறு சம்பவங்களில் தமிழகக் காவல்துறை திறமையாகத் துப்புத் துலக்கியுள்ளன.

அண்மையில் 'விஷ ஊசி'க்கு அடுத்து, திருவான்மியூர் பாங்க் கொள்ளை தமிழகத்திலே பெரும் பரபரப்பை உண்டாக்கியது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் நடந்து ஒரு மாதத்திற்குள்ளாகவே தமிழகக் காவல்துறையினர் 'கம்ப்யூட்டர்' மூலம் துப்பறிந்து குற்றவாளிகளைக் கைது செய்துள்ளனர்.

மன்னார்குடி அர்ச்சகர் கொலை சம்பந்தமான குற்றவாளிகளைக் கண்டுபிடித்தது; அம்மன் நகைகளை மீட்டது ஆகியவை அண்மையில் கிடைத்த வெற்றிகளாகும்!

இப்படி அன்று முதல் இன்று வரை நடந்துள்ள சம்பவங்களில், துப்புத் துலக்கிய தமிழகக் காவல் துறையின் சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

அண்மையில் சர்வதேச போலீஸ் அமைப்பின் செகரட்டரி ஜெனரல் திரு. ஜீன் நிபோடே அவர்கள் தமிழ்நாடு காவல் துறைத் தலைமை அலுவலர் திரு. எப். வி. அருள் அவர்களின் விசேட அழைப்பின் பேரில் சென்னைக்கு வந்திருந்தார்.

சென்னையில் காவல்துறைத் தலைமை அலுவலகம், மற்றும் இரசாயன ஆராய்ச்சிக்கூடம், கைரேகைப் பகுதி, கம்ப்யூட்டர் பிரிவு, துப்பறியும் நாய்ப்படை, சென்னை நகரக் காவல்துறை ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றை அவர் பார்வையிட்டார்.

''இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குக் கடத்திச் செல்லப்படுகின்ற சிலைகள் மற்றும் வரலாற்றுப் புகழ் பெற்ற பொருள்கள் ஆகியவற்றைக் கண்டுபிடிப்பதையும், அது போன்ற கடத்தல் வேலைகள் நடைபெறாமல் தடுப்பதையும் முக்கியப் பணிகளாகக் கொண்டு 'சர்வதேச போலீஸ் அமைப்பு' (இண்டர்போல்) செயல்பட்டு வருகிறது.

''இந்தியாவிலிருந்து கடத்தப்படும் சிலைகள் பற்றிய விவரங்களை இந்திய மத்திய புலனாய்வுத் துறையினர் சர்வதேசப் போலீஸ் அமைப்புக்குத் தருவார்கள். அதை வைத்துக்கொண்டு இங்கிருந்து கடத்தப்படும் சிலைகளை மற்ற நாட்டுக் காவலருடன் தொடர்பு கொண்டு கண்டுபிடிக்கிறோம்.

''மேலை நாடுகளிலிருந்து இந்தியாவுக்குப் போதைப் பொருள்கள் மற்றும் மருந்துகள் ஆகியவற்றைக் கடத்துவதைக் கண்டுபிடிப்பதிலும் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறோம். மருந்துப் பொருள்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காகப் ''பாங்காக்'' நகரத்தில் சர்வதேச போலீஸ் அமைப்பைச் சேர்ந்த விசேட உயர்மட்டக் காவல் அலுவலர் ஒருவரை நியமித்து இருக்கிறோம்'' என்று கூறிய திரு. நிபோடே அவர்கள் தமிழ்நாட்டுக் காவலர்களின் திறமையை வெகுவாகப் பாராட்டிப் புகழ்ந்தார்:

''தமிழகக் காவல்துறையினர் வழக்குகளைத் துப்புத் துலக்குவதற்கு மிகவும் நவீனக் கருவிகளையும், முன்னேற்றமான சாதனங்களையும் கையாள்வதைக் கண்டு வியந்து போனேன். தமிழகக் காவல் துறையினரும், சென்னை நகரக் காவல் துறையி

வெண்டைச் செடிகளுக்குக் கீழ்க்காணும் மருந்து அட்டவணையை மேற்கொள்ள வேண்டும்.

வெண்டை விதையை 'கார்போபியூரான்' 50 சதநனையும் தூள் (12 கிராம்/100 கிராம் விதை) மருந்துடன் நன்கு கலந்து பின் விதைக்க வேண்டும்.

அல்லது

2. 'டெமிக்' 10 சதம் குருணையை எக்டேருக்கு 10 கிலோ அல்லது 'சால்விரக்ஸ்' 5 சதம் குருணையை ஒரு எக்டேருக்கு 20 கிலோ வீதம் விதைத்த 10 நாட்களுக்குப் பின் போடவேண்டும். இக் குருணை மருந்துகளைச் செடியின் வேர்பாகத்திலிட்டு மண்ணினால் மூடி, உடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இக்குருணை மருந்துகளின் மூலம் செடிகளின் சாற்றை உறிஞ்சி வாழக் கூடிய பூச்சிகளான அசுவணி, தத்துப்பூச்சி, சிலந்திப்பூச்சி முதலியவை வராமல் பாதுகாக்கப்படுகிறது. இம்மருந்து 40-50 நாட்கள் வரை செடியினுள் இருந்து மேற்கூறிய பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது.

3. கீழ்க்காணும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை விதைத்த 35-40 நாட்களுக்குப் பின், 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் இரண்டு அல்லது மூன்று முறை மருந்து தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.

E 'செவிமால்' 0.1 சதம் (750 கிராம்/ஏக்கர்)

(அல்லது)

'எண்டோ சல்பான்' 0.07 சதம் (650 மி.லி./ஏக்கர்)

(அல்லது)

'நுவக்ரான்' 0.1 சதம் (750 மி.லி./ஏக்கர்)

(அல்லது)

'ஆர்த்தேன்' 0.7 சதம் (650 கிராம்/ஏக்கர்,

இவ்வாறு மருந்து தெளித்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதனால், ஏறக்குறைய எக்டேருக்கு ரூபாய் 2,000 முதல் 2,500 வரை அதிக இலாபம் கிடைக்கிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பெருமக்கள் இப்புதியப் பயிர்ப்பாதுகாப்பு முறையை அனுசரித்தால், வெண்டையிலிருந்து நல்ல வருமானம் பெறுவதற்கு வழியுண்டு.

தகவல்: மு. கோபாலன்,
சு. உத்தமசாமி,
து. குமரேசன்,
பூச்சியியல் பிரிவு,
தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழகம்

வெளியீடு: தகவல்தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோவை-3.

ESTD: 21-3-52. தபால் மூலம் GOVT REGD: 3072.

இலவசக் கல்விபோதனை

C குரூப் வகுப்புகள் ஆரம்பம் : 12-6-1975

ஆண்—பெண் இருபாலரும் 1975-76-ம் வருட சர்க்கார்-பல்கலைக் கழக தேர்வுகளில் தேர்ச்சி பெற உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.

1. S. V. B. A., B. Com., B. Sc., March- 1976 (P.U.C./இண்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 2. B. L., M.A., M.Com., A.M.I.B.M., M.B.A. (பட்டதாரிகள் அருகதையுடையவர்கள்.) 3. ஆக்ரா-டில்லி-கர்நாடக் B.A., B.Com., B. Sc.. (S. S. L. C. (அ) S. S. C. ஆ, மெட்ரிக் தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்.) 4. போபால்-ஆந்திரா-கர்னுடக்-டெல்லி இண்டர் (S.S.L.C./S.S.C. மெட்ரிக் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 5. A. C. B-I. (London) S.S.L.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள், 6. Account Text Exmns. (I. M. C.. S.S.L.C./S.S.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 7. டெலிபோன் ஆப்ரேட்டர்-டெலிகிராபிக் ஒயர்லெஸ். 8. சென்னை-மதுரை-திருப்பதி மெட்ரிகுலேஷன். 9. சென்னை-மதுரை P. U. C. 10, தமிழ் வித்துவான்-புலவர் தேர்வுகள். 11. விவசாயம். 12. போஸ்ட்மென். 13. போஸ்டல் கிளார்க். 14. கைத்தறி நெசவு. 15. அக்கவுண்டன்ஸி. 16. கிராம மணியம்-கர்ணம். 17. சர்வீஸ் கமிஷன் (தமிழ் அண்ட் ஆங்கிலம் அக்-75). 18. S.S.L.C. (8 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 19. Com INTER. D. Com.. B. Com.. B. Com (Hons) M. Com.. S. S. L. C. அல்லது P. U. C. தேறியவர்களும்-தவறியவர்களும் 75-நவம்பர் தேர்வில் கலந்து கொள்ளலாம். 20. பேசிக் ஆங்கிலம். 21. பிரி-மெட்ரிக். 22. ஹோமியோபதி. 23. காம்பாசிடர். 24. டெல்லி ஹையர் செகண்டரி தேர்வு (X. XI) படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.)

முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

'தமிழகத்தின் தனிப் பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்'

Affiliated by I.A. & A.I.S. Educations & Com. University, New Delhi

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிட்யூட்

ரிஷிவந்தியம்—S.O., Pin : 606205. தென்னார்க்காடு மாவட்டம். தமிழ்நாடு.

கிளைகள் : சிலோன், மலேசியா, தெ. ஆப்பிரிக்கா, மாரிஷஸ் அண்ட் இந்தோனேஷியா.

'Kalvikkadir' Dr. R. P. Kandasami, H.P., B.Com (Hons). Principal,

சிறு துளி பெரு வெள்ளம்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யுங்கள்

TNSC BANK

டெபாஸிட்டுகளுக்கு எங்கள் வட்டி விகிதங்கள் :

1. சீசன் டெபாஸிட்டுகள்- ரூ 1000/-மும் அதற்கு மேலும் — வருடத்திற்கு
   - 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை — 3.25%
   - 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை — 3.75%
2. தவணை டெபாஸிட்டுகள்- ரூ 100/-ம் அதற்கு மேலும்

காலம்	வருடத்திற்கு
91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக	5.75%
6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக	6.25%
9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக	7.25%
1 வருடமும் அதற்கு மேலும் ஆனல் 3 வருடங்களுக்கு குறைவாக	8.25%
3 வருடங்களும் அதற்கு மேலும் ஆனல் 5 வருடங்கள் வரை	9.25%
5 வருடங்களுக்கு மேல்	10.25%

3. சேவிங்ஸ் கணக்கு — 5.75%
4. நடப்பு (current) கணக்கு — வட்டி கிடையாது

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,

379, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோடு, சென்னை-600 001
தந்தி : 'URBANK' போன் : 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ் : MS 7225

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு). அண்ணா சாலை (அண்ணா சிலை). அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர். கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லீஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம். ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெனாய் நகர். தியாகராய நகர் & திருவல்லிக்கேணி.

TNSCB : 122/75

சமதர்மப் பாதையில் தமிழ்நாடு அரசு!

-ஆர். எம்.



“சமதர்மம் என்றால் வெறும் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; சமுதாய நிலையிலும் மாற்றங்கள் பூத்துக் குலுங்க வேண்டும். சமுதாய மாற்றமற்ற பொருளாதார மாற்றம், புண்ணை மறைத்துப் பொன்துகில் அணிந்துக் கொள்கிற கதையாக முடிந்துவிடும். பொருளாதாரத் துறையில் மட்டும் நவீன கால முன்னேற்றங்களை நடமாட விட்டுவிட்டு, சமுதாயத் துறையில் பகுத் தறிவற்ற கொள்கைகளைப் படமெடுத்தாட அனுமதித்து விட்டால், சமதர்மம் புயல் நுழைந்த பூங்காவாகத்தான் தோற்றமளிக்கும்!’’

‘‘இந்தக் கருத்துகளை நெஞ்சத்துச் சித்திரங்களாக்கி நாடு வாழ, நலிவு தீர, சமுதாயக் கேடு களைய 1967-ஆம் ஆண்டு தமிழகத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் பொறுப்பேற்று, தொடர்ந்து 1971-லும் மக்களின் பேராதர வோடு பயணம் நடத்தும் இந்தத் தமிழக அரசு, தேர்தல் காலத்து வாக்குறுதி கள் காற்றில் பறக்க விடப்பட வேண்டியவை என்று கருதாமல், அவைகளைக் கல்மேல் எழுத்தெனக் கொண்டு இயன்ற வரையில் கடமை ஆற்றி வருகிறது’’ என்று **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் 1972-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் நாள் சட்டமன்றப் பேரவையில் கூறியுள்ளார்.

சமதர்மச் சமுதாயம் அமைக்கும் இலட்சியத்தில் எந்த அளவுக்குத் தமிழ்நாடு அரசு வெற்றி பெற்றுள்ளது என்பதற்கானச் சான்றுகளைத் தமிழ்ச் சமுதாயத்தின்முன் காணிக்கையாகப் படைத்துள்ளோம்!

‘‘**ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!**’’—என்ற இலட்சியத் துடன் செயலாற்றிவரும் தமிழ்நாடு அரசு, ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயத்தை அமைத்திட வேண்டுமென்பதற்காக இந்தியாவிலேயே முதன் முதலாகப் பின்கண்ட திட்டங்களை நிறைவேற்றி சாதனை படைத்துள்ளது!

அ. புது வாழ்வு அளித்திடும் மறுவாழ்வுத் திட்டங்கள் !

''ஏனெடுத்தோம் இந்த ஜென்மம்?'' என்று ஏங்கித் தவிக்கின்ற—சமுதாயத்தின் அடித்தளத்திலே புழுவாய் நெளிந்து அவதியுறுகின்ற எண்ணற்ற மக்களின் பிரச்சினைகளைப் பொது மக்களின் நாட்டத்திற்குக் கொண்டு வந்து அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வழி செய்வதே **தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்களுடைய பிறந்த நாள் திட்டங்களின் நோக்கமாகும்.

1. 48-வது பிறந்த நாள்— பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம் :

தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதற்காகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள மறு வாழ்வு இல்லங்கள் ... 10

மறுவாழ்வு இல்லங்களில் மகிழ்ச்சியாக வாழும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் ... 3,406





2. 49-வது பிறந்த நாள்— கண்ணொளி வழங்கும் திட்டம்:

பார்வை இழந்தவர்களின் வாழ்வில் புத்தொளி ஏற்படுத்துவதற்காக நடத்தப்பட்டுள்ள இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் ... 244

இலவசக் கண்சிகிச்சை முகாம்கள் மூலம் பயன் பெற்ற மக்கள் ... 6,77,027

புரையோடிய கண்களுக்கு அறுவைச் சிகிச்சையும் மூக்குக் கண்ணாடியும் பெற்று புத்தொளி பெற்றவர்கள் ... 95,095

மாலைக் கண்களுக்கு அறுவைச் சிகிச்சை பெற்றவர்கள் ... 82,355

சிறிய அறுவைச் சிகிச்சை பெற்றவர்கள் ... 1,202

3. 50-வது பிறந்த நாள்— சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம்:

'மனிதனை மனிதன் இழுத்துப் பிழைப்பது இழிவு'! என்பதால், கைரிக்ஷா இழுத்துப் பிழைத்தவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ள சைக்கிள் ரிக்ஷாக்கள் ... 768

மாநகராட்சி ஊழியர்கள திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள சைக்கிள் ரிக்ஷாக்கள் 414

வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள சைக்கிள் ரிக்ஷாக்கள் ... 973







4. 51-வது பிறந்த நாள்— ஊனமுற்ரோர் மறுவாழ்வுத் திட்டம்:

''முடமானோர் முன்னேற வேண்டும்;
கூனர்களும் நிமிர்ந்து நடக்க வேண்டும்;
செவிடர்களும் செவிப்புலன் பெற வேண்டும்!''

—என்ற இலட்சியத்துடன் வழங்கப்பட்டுள்ளவை:

(1) சக்கர நாற்காலிகள் ... 86

(2) மூன்று சக்கர சைக்கிள்கள் ... 776

(3) காது கேட்கும் கருவிகள் ... 467

(4) அலுமினிய ஊன்றுகோல்கள் ... 94

ஊனமுற்றவர்களும் தொழில் செய்து ஓரளவுக்கு வருவாய் தேடிக் கொள்வதற்காக அளிக்கப்படும் பயிற்சியில் பங்குபெற்றுப் பயிற்சி பெற்றவர்கள் ... 1,000

50 வயதைத் தாண்டிய ஊனமுற்றவர்களுக்கு மாதம் தோறும் வழங்கப்படும் ஓய்வூதியத்தொகை ... 20 ரூபாய்

5. 52-வது பிறந்த நாள்—அனாதைச்சிறுவர் மகளிர் மறுவாழ்வுத் திட்டம் :

அனாதை இளஞ்சிறார்களுக்கும், ஆதரவற்ற விதவைகளுக்கும் தமிழக அரசே தாயாக இருந்து காப்பாற்றும் திட்டம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் 52-வது பிறந்த நாளில் (3—6—1975) துவக்கப்படவிருக்கிறது.

ஆ. சமூகநலத் திட்டங்கள்!

1. நிலமற்றவர்க்கு நிலப்பட்டா!

இந்திய விடுதலைக்குப் பிறகு 20 ஆண்டுக் காலத்தில் அதாவது 1947—48 முதல் 1966—67 வரை—தமிழ்நாட்டில் நிலப் பட்டா பெற்றவர்கள் ... 1.15 இலட்சம்

மேற்கூறிய 20 ஆண்டுக்காலத்தில் தமிழ் நாட்டில் ஒப்படை செய்யப்பட்ட நிலங் களின் பரப்பு ... 2.88 இலட்சம் ஏக்கர்

இன்றையத் தமிழ்நாடு அரசு நிலப்பட்டா வழங்கும் திட்டத்தைத் தீவிரப்படுத்தியதன் காரணமாக 8 ஆண்டுக் காலத்தில்—அதாவது 1967—68 முதல் 31—1—1975 வரை—தமிழ் நாட்டில் நிலப்பட்டா பெற்றவர்கள் ... 3.61 இலட்சம்

மேற்கூறிய 8 ஆண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் ஒப்படை செய்யப்பட்ட நிலங் களின் பரப்பு 7.04 இலட்சம் ஏக்கர்

2. வீடற்றவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா!

இந்திய விடுதலைக்குப் பிறகு 20 ஆண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் வீட்டுமனைப் பட்டா பெற்றவர்கள் ... 63,770

''பறவைக்கும் கூடு உண்டு; பாம்புக்கும் புற்று உண்டு; பூச்சிப் பூரான்களுக்கும் பொந்து உண்டு; ஆனால் ஆறறிவு படைத்த ஏழைக்கோ குடியிருக்க வீடில்லை!''

இந்நிலை இனியும் இருக்கக் கூடா தென்பதற்காக, இன்றையத் தமிழ்நாடு அரசு, வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டத்தை முனைப்பாக்கியது! அதன் பயனாய், 8 ஆண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் வீட்டுமனைப்பட்டா பெற்ற வர்கள் ... 4,94,692



3. ஒரு துளி மையினால் ஏற்பட்ட புரட்சி!

(குடியிருப்பு அனுபோகதாரர் சட்டம்!)

பரம்பரை பரம்பரையாகப் பண்ணையார்களின் வயலில் குடிசைப் போட்டுக்கொண்டு வாழ்ந்து வந்த வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு, இன்றைய தமிழ்நாடு அரசால் கொண்டு வரப்பட்ட '1971-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டம்' அனுபோகப் பாத்தியதை வழங்கியுள்ளது!

''இரத்தப் புரட்சியால் சாதிக்க முடியாததை, ஒரு துளி மையினால் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சாதித்துவிட்டார்!'' என்று சட்டமன்ற உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் இச்சட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார்!

1971-ஆம் ஆண்டின் குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டப்படி 31—12—1974 வரை குடியிருப்புப் பட்டா பெற்றவர்கள் ...	1,73,748
குடியிருப்புப் பட்டா பெற்றவர்களில்—	
தாழ்த்தப்பட்டவர்கள்	1,03,470
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்	50,561

4. உழுபவனுக்கே நிலம் சொந்தம்!

1961-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின்படி 31—3—67 வரையான காலத்தில் உபரி நிலமென்று அறிவிக்கப்பட்ட பரப்பு	24,194 ஏக்கர்
அறிவிக்கப்பட்ட பரப்பில் உடைமையாக எடுத்துக்கொண்ட பரப்பு	16,330 ஏக்கர்
எடுத்துக் கொண்ட பரப்பில்—ஒப்படை செய்து வழங்கிய பரப்பு	ஒன்றும் இல்லை.

''உழுபவனுக்கே நிலம் சொந்தம்!'' என்ற இலட்சியத்துடன் இன்றைய தமிழ்நாடு அரசு, 1961-ஆம் ஆண்டின் நிலச்சீர்திருத்தச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தியதன் காரணமாகவும், அச்சட்டத்தில் இருந்த குறைபாடுகளை நீக்கி 1970, 1971, 1972-ஆம் ஆண்டுகளில் கொண்டுவந்த திருத்தப்பட்ட சட்டங்களின் காரணமாகவும், 1—4—1967 முதல் 31—3—75 வரையான காலத்தில் பின்கண்ட முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது!

உபரி நிலமென்று அறிவிக்கப்பட்ட நிலப்பரப்பு...	1,01,111 ஏக்கர்
உடைமையாக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலப் பரப்பு	78,967 ஏக்கர்
ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு ...	56,535 ஏக்கர்
நில ஒப்படை பெற்றோரின் எண்ணிக்கை ...	35,482 ஏக்கர்

5. மனுநீதித் திட்டம்!

கிராம மக்கள் 15—9—1969-க்கு முன்பு தங்கள் குறைகளைத் தெரிவிக்க அலுவலர்களைத் தேடிச் செல்ல வேண்டியிருந்தது!

இன்றைய தமிழ் நாடு அரசு 15—9—1969 முதல் செயல்படுத்தி வரும் 'மனுநீதித் திட்டம்' எனப்படும் பொதுமக்கள் தொடர்புத் திட்டப்படி, அரசு அலுவலர்களே குறிப்பிட்ட நாட்களில் கிராமங்களுக்குச் சென்று கிராம மக்களின் குறைகளைக் கேட்டு மனுக்களைப் பெற்று, மனுக்களில் கண்ட குறைகளை முடிந்த அளவில் அங்கேயே உடனுக்குடன் தீர்த்து வருகின்றனர்!

மனுநீதித் திட்டப்படி 15—9—69 முதல் 30—9—1974 வரை பெறப்பட்ட மனுக்கள்	8,35,034
மேற்கூறிய காலத்தில் தீர்வு காணப்பட்ட மனுக்கள்	7,70,616
மக்கள் குறைகளைத் தீர்த்த அளவு ...	92.2 சதம்

6. குடிசைப் பகுதியை மாற்றும் திட்டம்!



முதலாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்திலிருந்து 1966—67-ஆம் ஆண்டு வரைத் தமிழ் நாடு அரசால் கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள்	4,073
இன்றையத் தமிழ் நாடு அரசால், 1967—68 முதல் 1970—71 வரை தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள் ...	7,722
தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 1967-ஆம் ஆண்டில் ஒரே மாதத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட எரியாத குடியிருப்புகள் ...	4,999
இன்றையத் தமிழ் நாடு அரசால் துவக்கப்பட்ட தமிழ் நாடு குடிசை மாற்று வாரியத்தால் 1971— முதல் 1974—75 வரை சென்னை நகரில் கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள் ...	18,266

தமிழ் நாடு வீட்டுவசதி வாரியத்தால் 1971 முதல் 1974—75 வரை வெளியூர்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ள குடியிருப்புகள்:

1.	கோவை ...	3,795
2.	மதுரை ...	598
3.	திருச்சி ...	455
4.	சேலம் ...	1,761
5.	தஞ்சை ...	381
6.	திருநெல்வேலி ...	80
7.	கடலூர் ...	117

7. ஊரெங்கும் ஒளிமயமாக்கும் திட்டம்!

''பொன்சாரம் இட்டழைக்கும் பூமான்கள் வீட்டுக்கே
மின்சாரம் போகுமென்ற நிலைமாற்றி''
ஏழை எளியவர்கள் வாழுகின்ற குக்கிராமங்களுக்கும், அரிசனக்காலனிகளுக்கும் மின்னொளி வழங்கி இன்றைய அரசு, ஊரெங்கும் ஒளிமயமாக்கியுள்ளது என்பதற்கான சான்றுகள் இதோ!

1933-ஆம் ஆண்டு முதல் அதாவது மின்சாரம் முதன் முதலாகத் தமிழ் நாட்டிற்குள் நுழைந்த ஆண்டு முதல் 1967 வரையான 34 ஆண்டுகளில் தமிழ் நாட்டில் மின் வசதி பெற்ற நகரங்கள், கிராமங்கள், குக்கிராமங்கள் ஆகியவைகளின் எண்ணிக்கை 20,250

1—4—1967 முதல் 1—5—75 வரை இன்றையத் தமிழ்நாடு அரசின் முயற்சியால் புதிதாக மின்வசதி பெற்ற நகரங்கள், கிராமங்கள், குக்கிராமங்கள் ஆகியவைகளின் எண்ணிக்கை ... 40,973

1933 முதல் 1967 வரையான 34 ஆண்டுக் காலத்தில் மின் வசதி பெற்ற அரிசனக் காலனிகள் 4,354

கடந்த 8 ஆண்டுக் காலத்தில் புதிதாக மின்வசதி பெற்ற அரிசனக் காலனிகள் 19,566

1933 முதல் 1967 வரையான 34 ஆண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் மின்னிணைப்பு பெற்றிருந்த பம்பு செட்டுகள் ... 2,89,903

கடந்த 8 ஆண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் புதிதாக மின்னிணைப்புப் பெற்ற பம்பு செட்டுகள் 5,18,902



8. அரசு அலுவலர் குடும்ப நன்மைத் திட்டம்!

1974-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் நாள் முதல் துவக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வரும் அரசு அலுவலர் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின்படி, அரசு அலுவலர் ஒருவர் பதவியில் இருக்கும்பொழுது இறந்து விட்டால் அவரது குடும்பத்திற்கு வழங்கப்படும் தொகை ரூபாய் 10,000

இத்திட்டத்தின்கீழ் பயனடைய, ஒவ்வொரு அரசு அலுவலரும் மாதந்தோறும் செலுத்தும் தொகை ... ... 1 ரூபாய்

இத்திட்டத்தின்படி 1974-ஆம் ஆண்டில் பயன் அடைந்த குடும்பங்கள் 934

பயன்பெற்ற குடும்பங்களில் மாத வருவாய் ரூபாய் 300-க்கும் குறைவாக உள்ள குடும்பங்கள் 800





9. சமூகப் பாதுகாப்புத் திட்டம்!

பொதுமக்கள், குறிப்பாகக் குறைந்த வருவாய் பெறும் மக்களும், திங்கள் தோறும் ஒரு குறிப்பிட்டத் தொகையைச் செலுத்தி வந்தால், குறிப்பிட்டக் காலக் கெடு முடிந்த பின், திங்கள்தோறும் ரூபாய் 20 முதல் 100 வரை ஓய்வூதியம் பெறுவதற்கான வாய்ப்பினைத் தமிழ்நாடு அரசின் 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம் வழங்கியுள்ளது.

இத்திட்டம் 1974-ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் (15—9—1974) அறிவிக்கப்பட்டு, மறைந்த இந்தியத் தலைமை அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிறந்த நாளில் (14—11—1974) துவக்கப்பட்டது.

சமுதாயத்தின் அடித்தள மக்களும் ஓய்வூதியம் பெறுவதற்கான வாய்ப்பு இந்தியாவிலேயே முதன் முதலில் தமிழ் நாட்டில்தான் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டமாகும்!

10. கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம்!

கைத்தறி நெசவாளரின் துயர் துடைத்திட, கைத்தறி நெசவாளரின் குடும்பத்தைப் பாதுகாத்திட ஆயுள் ஈட்டுறுதிக் கழக ஒத்துழைப்புடன் இத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

இத்திட்டப்படி மாதம் 100 ரூபாய் ஊதியம் பெறும் கூட்டுறவுச் சங்க நெசவாளர் ஒருவர் மாதாமாதம் செலுத்த வேண்டிய தொகை ...	6 ரூபாய்
அவருக்காகத் தமிழ்நாடு அரசு மாதம்தோறும் செலுத்தும் தொகை	3 ரூபாய்
எதிர்பாராத விதமாக அந்த நெசவாளி 20 ஆண்டிற்குப் பிறகு இறந்துவிட்டால் அவருடைய குடும்பத்திற்குக் கிடைக்கும் தொகை ...	4,320 ரூபாய்

கைத்தறி நெசவாளரின் குடும்பத்தைப் பாதுகாக்கும் இத்திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ் நாட்டில்தான் துவக்கப்பட்டுள்ளது!

எனவே சமுதாயத்தின் அடித்தளத்து மக்களின் வாழ்வை வளமாக்கி, ஏற்றத்தாழ்வற்ற சமதர்மச் சமுதாயம் அமைக்கும் தமிழ் நாடு அரசின் சமூக நலத் திட்டங்கள் வெற்றி பெற உங்கள் ஒத்துழைப்பை நல்கிடுவீர்!